www.Padasalai.Net www.CBSEtips.in

12 - ஆம் வகுப்பு

# காலாண்டுத் தேர்வு - 2022

## வரலாறு

பதிவு எண். 00123 10

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

I குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20 X 1 = 20

1. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
   அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
   அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O ஹியூம் ஈ) பால கங்காதர திலகர்

3. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது? அ) அரவிந்த கோஷ்
   ஆ) தாதாபாய் நௌரோஜி இ) பெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதி ராய்

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
   அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
   ஆ) G.சுப்ரமணியம் - விடிவெள்ளிக் கழகம்
   இ) மின்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம், 1904
   ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

5. பின்வருவனவற்றுள் அன்னிபெசன்ட் பற்றிய சரியான கூற்று எது?
   1) கர்னல் எச்.எஸ்.ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலகளாவிய தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2) 1914 இல் அவர் காமன்வீல் என்ற வாராந்திரியை தொடங்கினார். 3) 1915 ஆம் ஆண்டு " How India Wrought for Freedom " என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார்.
   அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 1 மற்றும் 3 ஈ) 1, 2 மற்றும் 3.

6. " Indian Unrest "என்ற புத்தகத்தின் ஆசிரியர்
   அ) லாலா லஜபதிராய் ஆ) வேலன்டைன் சிரோல் இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

7. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?
   அ) சைமன் குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.
   ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை. இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.
   ஈ) அது முழுச்சுதந்திரத்துக்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

8. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் கால வரிசைப்படுத்துக
   1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
   2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.
   3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.
   4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.
   அ) 2, 1, 4, 3 ஆ) 1, 3, 2, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4, 1

9. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
   அ) மதராஸ் - அரக்கோணம்
   ஆ) பம்பாய் - பூனா
   இ) பம்பாய் - தானே
   ஈ) கொல்கத்தா - ஹூக்ளி

10. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
    அ) எம்.என்.ராய் ஆ) பகத் சிங் இ) எஸ்.ஏ.டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

11. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர் .........
    அ) ரஹமத்துல்லா சயானி ஆ) சர் சையது அகமது கான் இ) சையது அமீர் அலி ஈ) பட்ருதீன் தயாப்ஜி

12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க .

| பட்டியல் I | | பட்டியல் II | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் | (அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) சையது அகமது கான் | - | 2. தயானந்த சரஸ்வதி | (ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை | (இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் | (ஈ) | 2 | 3 | 4 | 1 |

13. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
    அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

14. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
    அ) சட்ட மறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
    இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

15. பின்வரும் நிகழ்வுகளின் சரியான காலவரிசையைத் தேர்க.
i) சீன மக்கள் குடியரசு ii) சீனாவுடனான இந்தியப் போர்
iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம் iv) பஞ்சசீலக் கொள்கை v) நேரு – லியாகத் அலி கான் ஒப்பந்தம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) i, ii, iii, iv, v (ஆ) iii, i, v, iv, ii (இ) iii, iv, i, v, ii (ஈ) i, iii, iv, v, ii
16. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்.........
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா
17. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன் இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா
18. 1951 ஆம் ஆண்டு இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?
அ) 5 ஆ) 7 இ) 6 ஈ) 225
19. ............ இல் மிகப் பெருமளவில் டாடா நீர்மின்சக்தி நிறுவனம் உதயமானது.
அ) 1908 ஆ) 1910 இ) 1912 ஈ) 1914
20. 1930 இல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் .............. ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத் தான் காண விரும்புவதாகக் கூறினார்.
அ) ஜின்னா ஆ) இக்பால் இ) சர் வாசிர் ஹசன் ஈ) நவாப் ஜா. பருல்லா

**II குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண். 30 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **7 X 2 = 14**

21. தேசியம் என்றால் என்ன ?
22. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனி அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?
23. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
24. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
25. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?
26. ஆகாகான் தலைமையிலான முஸ்லீம் லீக் முன் வைத்த கோரிக்கைகள் என்ன?
27. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.
28. ஜே வி பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன ?
29. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
30. மௌண்ட்பேட்டன் திட்டம் பற்றி குறிப்பு வரைக.

**III குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **7 X 3 = 21**

31. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை" ஆய்க.
32. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
34. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது ?
35. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
36. 1909 ஆம் ஆண்டின் மிண்டோ – மார்லி சீர் திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
37. 1946 இல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்ற முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் யாவர் ?
38. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
39. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை ?
40. முதல் ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகளைப் பற்றி கூறுக.

**IV குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 X 5 = 35**

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க. ***(அல்லது)*** ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.
42. அ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக. ***(அல்லது)*** ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.
43. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. ***(அல்லது)*** ஆ) 1919 - 1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.
44. அ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன ? ***(அல்லது)*** ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.
45. அ) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது? ***(அல்லது)*** ஆ) பிரிவினைக்குப் பின் இந்தியாவில் கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
1. ஜம்மு காஷ்மீர் 2. ஜுனாகத் 3. ஹைதராபாத் 4. கிழக்கு வங்காளம் 5. பாகிஸ்தான்
46. அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக. ***(அல்லது)***
ஆ) ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.
47. அ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க. ***(அல்லது)*** ஆ) இந்திய விடுதலைப் போரில் (1920 -1940 ) நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடிட்டு காட்டவும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
CamScanner